# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2316/45 - 2023 ජනවාරි මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.01.26

*2316/45 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**அஞ்சல் அலுவலக சட்ட மூலத்தின் (190 வது அதிகாரம்) 45 ஆவது அத்தியாயத்தின் கீழ் தயாரிக்கப்படும் விதிகள்**

*2019.01.01 ஆந் திகதி தொடக்கம் 2019.12.31 ஆந் திகதி வரை வெளியிடப்பட்ட காசுக் கட்டளை*

காசுக்கட்டளை செல்லுயடியானது அது வழங்கப்பட்ட மாதத்தின் இறுதி தினத்திலிருந்து 06 மாதங்கள் கால வரையறைக்காக மட்டுமே இருந்தபோதிலும் செல்லுபடியாகும் காலம் முடிந்து காசுக்கட்டளையின் விஷேட நிலைமையை கவனத்தில் கொண்டு அது வழங்கப்பட்ட மாத்தின் இறுதித் தினத்திலிருந்து இரண்டு வருடங்கள் வரை பணம் செலுத்துதல் பற்றி கவனத்தில் கொள்ளப்படுகிறது. இருந்தபோதிலும் வழங்கப்பட்ட மாதத்தின் இறுதித் தினத்திலிருந்து இரண்டு வருடங்களுக்கு அதிகமான காசுக்கட்டளைகளை மீண்டும் செல்லுபடியாகுவதற்கு அல்லது அதன் பெறுமதியை மீளச் செலுத்துவதற்கு முடியாதுள்ளது என்பதுடன் அந்தக் காசுக்கட்டளைகளின் பெறுமதியானது அரசின் வருமானத்துக்கு வரவு வைக்கப்படுகிறது.

2. அவ்வாறான நிலைமையிலும் பின்வரும் விஷேட சந்தர்ப்பத்தின் கீழ் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காசுக்கட்டளைகளின் பெறுமதியில் உரிய கட்டணத்தை அறவிட்டதின் பின்னர் அரசின் வருமானத்திலிருந்து மீளச் செலுத்துதல் பற்றி கவனத்தில் கொள்ள முடியும்.

I. காசுக்கட்டளை நீதிமன்றத்துக்கு சமரப்பித்திருத்தல்.

II. சட்ட காரணத்தால் வீட்டு வாடகை கட்டுப்பாட்டுச் சபை மூலம் காசுக்கட்டளையைத் தேக்கி வைத்திருத்தல்.

III. காசுக்கட்டளையின் பணம் கிடைக்க வேண்டியவர் வெளிநாட்டில் இருதத்தல் (வெளிநாட்டுப் பயண கடவுச் சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்)

IV. பணம் கிடைக்க வேண்டியவர் நீண்ட காலமாக கடும் சுகயீனம் காரணமாக நோயால் பாதிக்கப்பட்ட உடல் நிலையைக் கொண்டிருத்தல் (அரசாங்கத்தின் வைத்திய உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக் கொண்ட வைத்தியச் சான்றிதழின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்)

3. மேற்படி 02(1) மற்றும் (II) இன் கீழ் உரிய காசுக்கட்டளை இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்க முடியாத பட்சத்தில் அவ்வாறான காசுக்கட்டளைகள் சம்பந்தமான விபரங்கள் உரிய வழக்கு இலக்கம் போன்றவைகளுடன் காசுக்கட்டளைச் சேவை கட்டுப்பாட்டாளருக்கு எழுத்து மூலம் அனுப்புதல் வேண்டும். காசுக்கட்டளை சமர்ப்பிப்பதற்கு அசௌகரியமாக இருந்தால் அது பற்றி எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

4. அதில் தற்பொழுது நீதிமன்றத்தில் காணப்படும் வழக்குக்காகவும் வேறு சட்டத் தேவைக்காகவும் நீதிமன்ற கட்டளைமூலம் தேக்கி வைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளைகள் வீட்டு வாடகை கட்டுப்பாட்டுச் சபை வழக்கு சம்பந்தமாக தேக்கி வைக்க வேண்டிய காசுக் கட்டளை திணைக்கள மற்றும் அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளப்படும் ஒழுக்காற்று விசாரணைக்காக வைத்துக் கொள்ளப்பட்ட காசுக்கட்டளை இதன்மூலம் உள்ளடக்கப்படாது.

5. 2019.01.01 ஆந் திகதி தொடக்கம் 2019.12.31 ஆந் திகதி வரை வழங்கப்பட்ட காசுக்கட்டளைக்குரிய இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதங்கள் பூர்த்தியாகும் வரை கிடைக்கும் முறைப்பாடுகளை மட்டும் கவனத்தில் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது சாதாரண காசுக்கட்டளை இலத்திரனியல் காசுக்கட்டளை பெக்ஸ் காசுக்கட்டளை மற்றும் பெறுமதி செலுத்தி பாரம் எடுக்கும் காசுக் கட்டளைக்குப் பொருந்தும் 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தின் கீழ் காசுக் கட்டளைகளின் பெறுமதி அரச வருமானத்துக்கு வரவு வைக்கப்பட்டிருத்தல் அந்தக் காசுக் கட்டளைகளின் பெறுமதி நிதிப் பிரமாணத்திற்கு அமைய வருமானம் மீளச் செலுத்தல் என கவனத்தில் கொண்டு உரிய துறையினருக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

6. ஆகவே மேற்படி 02ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறுகாசுக் கட்டளைக்காக பணம் மீளச் செலுத்தல் சம்பந்தமாகவும் கவனத்தில் கொள்ளும் பொருட்டு எழுத்து மூலம் மேற்கொள்ளப்படும் வேண்டுகோள் மற்றும் உரிய காசுக் கட்டளையுடன் காசுக் கட்டணச் சேவை கட்டுப்பாட்டாளருக்கு பின்வரும் முகவரிக்கு இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும் என அந்த அந்த மாகாணங்களுக்கான உள்ளூராட்சி மன்ற வீட்டு வாடகை கட்டுப்பாட்டுச் சபை அரசின் நிறுவனங்கள் வங்கி தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டுப்பாட்டளர் (காசுக்கட்டளைச் சேவை)
காசுக்கட்டளைச் சேவைப் பிரிவு,
பிரதி அஞ்சல் அதிபதி (மத்திய) அலுவலகம்,
அஞ்சல் தொகுதி,
அஞ்சல் திணைக்களம்,
கண்டி.

7. ஆனால் 2019.01.01 ஆந் திகதி தொடக்கம் 2019.12.31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குள் வழங்கப்பட்ட இந்த அறிவித்தலை இரண்டாவது பந்தியில் காணப்படும் விடயங்களுக்குரித்தான செல்லுபடியாகும் காலம் காலவதியாகிய காசுக் கட்டளைகள் பணம் மீளச் செலுத்துமாறு இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதங்களின் பின்னர் சமர்ப்பிக்கப்படும் வேண்டுகோள் பாரம் எடுக்கப்பட மாட்டாது எனவும் காசுக் கட்டளைக்கான பணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது எனவும் இதன் மூலம்அறிவிக்கிறேன்.

8. 2019.01.01 ஆந் திகதிக்கு முன் வழங்கப்பட்ட எந்த ஒரு காசுக் கட்டளைகளும் எக்காரணம் கொண்டும் அல்லது வேண்டுகோளுக்காக பணம் மீளச் செலுத்தப்படமாட்டாது.

**சாந்த பண்டார** (பா.உ.),
ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர்.

கொழும்பு,
2023, சனவரி 25.

EOG 01-0263

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.